[1979 மார்ச் 27]

பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே பாலம்.

* வினா எண். 532—திரு. கே. பண்ணை சேதுராம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அடையாறு-பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே மீண்டும் பாலம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம், எனில் அதன் விவரம் என்ன?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்):

(அ) ஆம்.

(ஆ) அடையாறு பக்கிங்காம் கால்வாயில் புற்றுநோய் மருத்துவ மனைக்கு அருகில் உள்ள பாலத்தை விரிவுபடுத்தும் வேலைக்கு அரசு ரூ. 8·00 லட்சத்திற்கு அனுமதி அளித்துள்ளது. மேற்படி வேலைக்கான ஒப்பந்தப்புள்ளிகள், தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப்—பணித் துறை) அவர்களால் 31—12—1977 அன்று ஒப்புதல் பெற்று அந்த வேலைகள் மும்முரமாய் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி எண். 533.

திரு. மு. ஆறுமுகம்: தலைவரவர்களே, ரூபாய் 5½ இலட்சம் மதிப்பில் ஒரு புது பேருந்து விடப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது குறித்து அங்கத்தினர்களுக்கு அறிவிக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதையெல்லாம் கேள்வி நேரம் முடிந்த பிறகு எழுப்புங்கள்.

சேரன் போக்குவரத்துக் கழகப் பணியாளர்கள்.

* வினா எண். 533—திரு. கு. ரமணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை சேரன் போக்குவரத்துக் கழகத்தில் பணி புரியும் தொழிலாளர்கள் 1977 மே மாதத்திலிருந்து 1978 மே மாதம் வரை வேலை நீக்கம் செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்? ஊர் மாற்றம் செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்?